# எருக்கஞ்சேரியில் விதிமீறி கட்டப்பட்ட 4 கட்டிடங்களுக்கு சீல்: மாநகராட்சி நடவடிக்கை

**சென்னை ஆக 013-**
கொடுங்கையூர் எருக்கஞ்சேரி பாரதிதாசன் தெருவில் உள்ள கலைச்செல்வி என்பவருக்கு சொந்தமான கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டு இருப்பதாக, மாநகராட்சிக்கு புகார் வந்தது.

**நடவடிக்கை**

அதன்பேரில், அதிகாரிகள் மேற்கண்ட கட்டிடத்தில் ஆய்வு செய்தபோது, விதிமீறி கட்டுமானம் நடைபெற்றது தெரியவந்தது. இந்நிலையில், தண்டையார்பேட்டை மண்டல அதிகாரி ராஜ்குமார், செயற் பொறியாளர் அரிநாத், உதவி செயற் பொறியாளர் சேகர், உதவி பொறியாளர்கள் பிரகாஷ், பாலச்சந்தர், பார்த்திபன் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் நேற்று, அந்த கட்டிடத்திற்கு சீல் வைத்தனர். இதேபோல், கொடுங்கையூர் கவியரசு கண்ணதாசன் நகர் மீனாம்பாள் சாலையில் ஜாவித் முகமது என்பவருக்கு சொந்தமான அடுக்குமாடி கட்டிடம் மற்றும் எம்கேபி நகர் மேற்கு அவன்யூ சாலையில் பாலாஜி என்பவருக்கு சொந்தமான 3 மாடி கட்டிடம், கொடுங்கையூர் தண்டையார் பேட்டை நெடுஞ்சாலையில் இனியன் என்பவருக்கு சொந்தமான 3 மாடி கட்டிடம் ஆகியவை விதிமீறி கட்டப்பட்டது தெரியவந்ததால், அவற்றுக்கும் அதிகாரிகள் சீல் வைத்தனர். புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு உரிய வழிகாட்டி நெறிமுறைகளை மாநகராட்சி வகுத்து கொடுத்துள்ளதாகவும், அதை மீறி கட்டப்படும் கட்டிடங்கள் சீல் வைக்கப்படும் எனவும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கல்விக்காக நம் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளால் கிட்டத்தட்ட 75 சதவீதம் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து இருக்கிறார்கள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை,ஆக.13**
தமிழ்நாடு துணை முதலமைச்சர். உதயநிதி ஸ்டாலின் பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு.பி.வில்சன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி உள்பட 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் கலையரங்கத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் வில்சன் அவர்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, அதுமட்டும் அல்லாமல், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதி ஆகியவற்றின் மூலம், இந்த பெரும்பாக்கம் அரசுக் கல்லூரியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர் கலையரங்கத்தை உங்களோடு சேர்ந்து திறந்து வைப்பதில் மிகுந்த பெருமையடைகின்றேன், மகிழ்ச்சி அடைகின்றேன் இந்த நேரத்தில் நான் அனைவரும் நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுக்களை நாம் தெரிவித்தாக வேண்டும். ஏனென்றால் அவருக்கு ஒதுக்கப்படுகின்ற தொகுதி மேம்பாட்டு நிதி அனைத்தையும் கல்வி, விளையாட்டு மேம்பாடு, பெண்களுடைய முன்னேற்றம் என்று இந்த பணிகளுக்காகவே அதை முழுவதும் செலவழித்திருக்கிறார். அவர் கூறியது போல கொளத்தூர் தொகுதியில் பள்ளிக்கூடம் கட்டுமானப் பணிக்காக 2 கோடியே 35 இலட்சம், இந்த கல்லூரிக்காக 2 கோடி ரூபாய், சென்னை ராணி மேரி மகளிர் கல்லூரிக்கு 5 கோடி ரூபாய், திருவண்ணமாலை நகரத்தில் மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் ஒரு ஆடிட்டோரியம் 1.5 கோடி ரூபாய் அதே போல் என்னுடைய சேப்பாக்கம், திருவல்லிக்கேணி தொகுதியில் ஒரு சமுதாய நலக்கூடம் கட்ட 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார். இப்படி தன்னுடைய ஒட்டுமொத்த தொகுதி மேம்பாட்டு நிதியையும் எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில் ஒதுக்கீடு செய்கின்ற அண்ணன் வில்சன் அவர்களுக்குக்கு நாம் அனைவரும் நம்முடைய பாராட்டுக்களை தெரிவிக்க வேண்டும். அதே மாதிரி, இன்றைக்கு கிட்டத்தட்ட 262 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவும் நடக்க இருக்கின்றது. இந்த ஆடிட்டோரியம் கட்டுவதற்க்கு தன்னுடைய எம்.பி நிதியை ஒதுக்கிய அவருக்கு, மாணவ, மாணவிகள் உங்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். நீ ங் கள் நினைக்கலாம், மாணவர்கள் சார்பாக நான் எப்படி நன்றி சொல்லலாம்னு நினைக்கலாம். உங்களைப் போல



நானும் ஒரு மாணவன் தான். நான் பெருமையாக கூறுவேன் தந்தை பெரியாருடைய மாணவன், அண்ணல் அம்பேத்கருடைய மாணவன், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞருடைய மாணவன் என்கின்ற பெருமையோடு இன்றைக்கு அந்த நன்றியை நான் சொல்லிக் கொள்கிறேன். மாணவர்கள் உங்களைப் பார்க்கும்போது ஒரு கூடுதல் உற்சாகம் ஏற்படுகிறது. குறிப்பாக, இந்த பெரும்பாக்கம் அரசு கலை, அறிவியல் கல்லூரியுடைய மாணவர்கள், உங்களோட எனர்ஜி வேற லெவல்ல இருக்கின்றது. அதற்கு என்னுடைய பாராட்டுக்கள். அந்த அளவுக்கு ஆரவாரத்தோட இருக்கின்றீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். கலைஞர் பேரில் அமைந்திருக்கக்கூடிய இந்த கலையரங்கத்தை திறக்கின்ற இந்த வாய்ப்பை அளித்ததற்கு நான் மீண்டும் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு ஆண் படித்தால் அது அந்த குடும்பத்துக்கு மட்டும் தான் உதவும். அதுவே, ஒரு பெண் படித்தால் அது ஒட்டுமொத்த சமூகத்திற்கே அது உதவியாக இருக்கும். ஆகவே, இங்கே இருக்கின்ற மாணவிகள் நீங்கள் ஒவ்வொருவரும், உங்க அடுத்த தலைமுறைக்கு ரோல் மாடலா இருக்க வேண்டும்.கல்விக்காக நம் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளால, தமிழ்நாட்டுல இன்னைக்கு பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரி படிக்கின்ற சதவீதம் எவ்வளவு தெரியுமா இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் நம்பர் 1 கிட்டத்தட்ட 75 சதவீதம் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு 75 சதவீதத்தை 100 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, அரசுப்பள்ளியில் படித்து உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டம் மூலம் ஒவ்வொரு மாதமும் 1,000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுக்கின்றார். இந்த 2 திட்டங்களிலும், தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு வருடமும் 8 லட்சம் பேர் பயன்பெற்று வருகிறார்கள் என்றார்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர்.பி.வில்சன், சட்டமன்ற உறுப்பினர்கள்எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி,, மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, , பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஆ. உமா மகேஸ்வரி, பேராசிரியர்கள் மற்றும் உடனிருந்தனர்.

# காமராஜர் உள்ளிட்ட நால்வருக்கு சிலை திறப்பு : முதல்வருக்கு இந்திய நாடார்கள் பேரமைப்பு பாராட்டு

**சென்னை ஆக 13-**
உலகின் பெரிய அதிசய திட்டமான பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தை கொண்டுவந்த தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் அவரோடு துணை நின்ற தலைவர்களுக்கு சிலை அமைத்து திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலினுக்கு இந்திய நாடார்கள் பேரமைப்பு நிறுவனத்தலைவர் ராகம். மா.செளந்தரபாண்டியன் பாராட்டு தெரிவித்துள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;-உலகம் போற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜரின் சீரிய முயற்சியாலும், கேரளா அரசின் அப்போதைய முதல்வர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு ஒத்துழைப்புடனும் இன்றைக்கு உலகமே வியந்து பார்க்கும் அளவிற்கு "கேரளா-தமிழ்நாடுகளுக்கிடையே அதிசய திட்டமான பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டம்" கடந்த 1958 ஆம் ஆண்டு தொடங்கி அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக காலம் கடந்தும், இன்றளவிற்கும் பெருமையுடன் சொல்லக்கூடிய வகையில் வேளாண்மைக்கு பயன்தரும் மிகப்பெரிய திட்டமாக விளங்கி வருகிறது. பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தால் தமிழ்நாட்டின் கோயமுத்தூர் மாவட்டம், திருப்பூர் மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டம், கேரளத்தின் பாலக்காடு மாவட்டம் ஆகியவை பயனடைகின்றன. பெருந்தலைவரின் சிந்தனையில் உதித்த மிகவும் கற்பனைத் திறன் கொண்ட, அணுகுமுறையில் துணிச்சலான, திட்டமிடலில் புத்திசாலித்தனமான மற்றும் அதன் முடிவில் நன்மை பயக்கும் இந்த மாநிலங்களுக்கு இடையேயான, பல்நோக்கு, பல பள்ளத்தாக்கு, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் உண்மையிலேயே ஒரு தனித்துவமான ஒன்றாகும். இந்தத் திட்டம் இரண்டு அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் தமிழ்நாட்டின் மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பின் அடையாளமாகும்.பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் துவங்க மிக முக்கிய காரணமாக இருந்த முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர், அவரது எண்ணத்தை செயல்படுத்த காரணமாக இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் பத்மபூஷன் டாக்டர் கே.எல்.ராவ் போன்றவர்கள் என்றென்றும் போற்றி பாராட்டப்படவேண்டியவர்கள். பெருந்தலைவர் காமராஜருக்கு அங்கு கண்காட்சி வளாகத்துடன் கூடிய மிகப்பெரிய சிலை அமைத்து அவ்ரது பெரு நன்முயற்சியை வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும் வகையில் தமிழக அரசு நினைவை போற்றும் ஒரு திட்டத்தை செயல்படுத்தி தரவேண்டுமென்பது இந்திய நாடார்கள் பேரமைப்பின் நீண்டநாள் அவாவாக இருந்தது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழக அரசின் சார்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், அவரோடு துணை நின்ற தலைவர்களுக்கும் பொள்ளாச்சி உடுமலை சாலையில் உள்ள நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் அலுவலக வளாகத்தில் 1.25 ஏக்கர் பரப்பளவில் 4.25 கோடி மதிப்பில் பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட நால்வரின் திருவுருவச் சிலைகள், பயிற்சி அரங்கம், கண்காட்சி அரங்கத்துடன் அமைத்து அவற்றை திறந்து வைத்ததற்கு இந்திய நாடார்கள் பேரமைப்பின் சார்பாக மிக்க நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். இங்கு மட்டுமில்லாமல் இதனைப்போன்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிந்தனையில் உதித்த பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள், அணைகள், தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் ஒருசில இடங்களில் அவை யாருடைய முயற்சியால் அமைக்கப்பட்டது என்பது தெரியாத வண்ணம் எந்த ஒரு குறியீடும் இல்லாமல் இருக்கிறது. அவற்றை தமிழக முதல்வரும் அரசும் கண்டறிந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப்பற்றி ஏதாவது ஒரு வகையில், சிலை அமைத்தோ அல்லது அந்த திட்டத்தைப்பற்றி நினைவு கண்காட்சி ஏற்படுத்தியோ அரசு பதிவு செய்யவேண்டும், அதுவே நாம் அவருக்கு செய்யும் மிகப்பெரிய நன்றியாகும் என்பதனையும், தமிழக முதல்வரையும் மக்கள் என்றென்றும் நினைவில் நன்றியுடன் நினைவில் கொள்ளவார்கள் என்பதனையும், இந்திய நாடார்கள் பேரமைப்பு கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

# ராயப்பேட்டை - ஐ.சி.எப் பகுதிகளில் போதை பொருள் கடத்திய இருவர் கைது

**சென்னை ஆக 13-**
போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினர் மற்றும் இராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து கண்காணித்து, மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை வைத்திருந்த 1.யாசர் அராபாத், 2.முகமது ரஷீட், 3.முகமது ஹாரீஸ், 4.அஸ்வத் கான், ஆகிய 4 பேரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

மேலும் காவல் குழுவினர் கடந்த ஜூலை மாதம் 3.ந் தேதி அன்று மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரி முகமதுஜெசிம், என்பவரை நுங்கம்பாக்கத்தில் வைத்து கைது செய்து அவரிடமிருந்து 0.45 கிராம் மெத்தம்பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

இதன் தொடர்ச்சியாக போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினர் மற்றும் இராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளி தர்வேஷ் முஷரப், என்பவரை திருவல்லிக்கேணி பகுதியில் வைத்து கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி மேற்படி நபர்களுடன் சேர்ந்து மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் விற்பனை செய்து வந்ததும், இவர் மீது ஏற்கனவே 1 போதைப்பொருள் வழக்கு உள்ளதும் தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி தர்வேஷ் முஷரப் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கத்தியைக்காட்டி மிரட்டி வழிப்பறி: ஒருவர் கைது

**சென்னை ஆக 13-**
சென்னை, கோட்டூர்புரம் பகுதியில் வசித்து வரும் செல்வம், என்பவர் காந்தி மண்டபம் ரோட்டில் ஜுஸ் கடை நடத்தி வருகிறார். இவரிடம், அர்ஜுன் என்பவர் கத்தியைக்காட்டி மிரட்டி அவரிடமிருந்த ரூ.1,500/- ஐ பறித்துக்கொண்டு தப்பிச்சென்றார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கோட்டூர்புரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட அர்ஜுன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

# திருவல்லிக்கேணியில் முதியவரிடம் வழிப்பறி: 3 பேர் கைது

**சென்னை ஆக 13-**
சென்னை, திருவல்லிக்கேணி, கற்பக கண்ணியம்மன் கோயில் 2 வது தெருவில் வசித்து வரும் கிரி, என்பவர் வசித்து வருகிறார். இவர் நேற்று முன் தினம் இரவு பெல்ஸ் ரோட்டில் உள்ள டாஸ்மாக் கடை முன்பு நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த 3 நபர்கள் மேற்படி முதியவர் கிரியின் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.2,200/- ஐ பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து கிரி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.அஜித் 2.ஜேம்ஸ் (எ) மணிகண்டன் , 3.எஸ்.அஜித், ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து செலவு செய்தது போக பணம் ரூ.500/- மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஜேம்ஸ் (எ) மணிகண்டன் மீது ஏற்கனவே குற்ற வழக்குகள் உள்ளதும், இவர் மெரினா காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

# சென்னை சைதாப்பேட்டையில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கு சென்று குடிமைப் பொருட்கள்: அமைச்சர் மா.சுப்பிரமணின் வழங்கினார்

**சென்னை,ஆக.13**
முதலமைச்சர் (12.08.2025) "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் சென்னை, சைதாப்பேட்டை, மசூதி தெருவில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார்கள். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சராக வணக்கத்திற்குறிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2021 ஆட்சி பொறுப்பேற்ற நாளில் இருந்து மக்களை தேடி பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, உங்களுடன் ஸ்டாலின், நலம்காக்கும் ஸ்டாலின் போன்ற பல்வேறு சேவை, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று புதிதாக தொடங்கப்பட்டிருக்கின்ற திட்டம் தான் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்". இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 34,809 அங்கன்வாடி கடைகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு 70 வயதை கடந்த முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களுடைய ரேசன் பொருட்களை ரேசன் கடைகளுக்கு சென்று வாங்குவதற்கு மிகபெரிய இடையூறுகள் இருந்தன. பெரும் பகுதியில் 70 வயது கடந்தவர்களுக்கு அவர்களுடைய கை ரேகையில் பிரச்சனை இருக்கும், கடைக்கு சென்று பொருட்களை காத்திருந்து வாங்கிவருவதற்கு அவர்களால் இயலாத சூழ்நிலையும் இருந்து வருகிறது. எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 70 வயதை கடந்தவர்களுக்கும், மாற்றுத்திறனாளி பெருமக்களும் அவர்கள் இருக்கின்ற இடங்களிலேயே வீடு தேடிவந்து சம்மந்தப்பட்ட துறைகளின் நிர்வாக உணவு துறை, கூட்டுறவு துறை போன்ற பல்வேறு தறைகளை சேர்ந்த 34,000 மேற்பட்ட ரேசன்கடை சம்பந்தபட்ட ஊழியர்கள் வீடுகளுக்கே சென்று அவர்களின் உணவு பொருட்களை தருகின்ற மகத்தான திட்டம் தான் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்".

இத்திட்டத்தை பொறுத்தவரை 70 வயதை கடந்தவர்கள் நிலையில் இருப்பவர்களின் குடும்ப அட்டைகள் 15,81,364. அதில் உள்ள பயனாளிகள் 20,42,657. அதேபோல் மாற்றுதிறனாளிகள் குடும்ப அட்டையின் பயனாளிகள் 91,969. அக்குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,27,797 ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகள் இன்றைக்கு 70 வயதை கடந்தவர்களுக்கும் மாற்றுதிறனாளர்களுக்கும் போன்ற குடும்பங்களின் பயனாளர்களை பொருத்தவரை 21,70,454 பேர், பயனார்கள் பயன்பெரும் வகையில் இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் இருந்து இன்று தொடங்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இது ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை சம்மந்தபட்ட விற்பனையாளர்-வினியோகிப்பவர்கள் மின் தராசு போன்ற இயந்திரங்களுடன் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கான குடிமைப்பொருட்கள் குறிப்பாக அரிசி, எண்ணெய், பருப்பு போன்ற பொருட்களை அவர்களின் முன்பாகவே எடை போட்டு தருகின்ற மகத்தான திட்டம் இது ஆகும். அந்தவகையில் 34,809 கடைகளில் பயன்பாட்டிற்கு வருகிறது.

தென்சென்னையைப் பொறுத்தவரை குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 9,64,774 ஆகும். இதில் 70 வயதை கடந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்று கணக்கெடுத்தால் 55,627 குடும்ப அட்டைகள் இருக்கின்றது. இதில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 80,608 பேர் ஆகும். ஆக இந்த திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது. மேலும் சைதாப்பேட்டை தொகுதியைப் பொறுத்தவரை இப்பகுதியில் உள்ள ஒட்டுமொத்த நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை 60. இந்த பகுதியில் 70 வயது தாண்டியவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 9,488. அதன்மூலம் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 13,834 பேர் ஆகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் 34,809 கடைகளின் மூலமாக 16,73,333 குடும்ப அட்டைகளின் வாயிலாக 21,70,454 பயனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த மகத்தான திட்டத்தை இன்று தொடங்கி வைத்திருக்கிறார்கள். இன்று சைதாப்பேட்டையில் 3 குடும்பங்களுக்கு நேரில் சென்று வழங்கினோம். நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டம் மூலம் மிகச் சிறப்பாக மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் தொடங்கப்பட்ட முதல் வாரத்தில் 44,418 பேர் பயன்பெற்றார்கள். இரண்டாவது வாரத்தில் 48,418 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். வரும் சனிக்கிழமை 16.08.2025 அன்று கிருஷ்ணஜெயந்தி அரசு விடுமுறை. அரசு அலுவலர்களுக்கான தொடர் விடுமுறை நாட்களாக இருப்பதால் அன்று முகாம் இல்லை. இத்திட்டம் ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட உள்ளது. முதல் வாரம் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்டது.ன்றார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ஸ்ரீதரன்,மோகன்குமார் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# ராஜமங்கலம் பகுதியில் கோயில் உண்டியல் உடைப்பு: ஒருவர் கைது

**சென்னை ஆக 13-**
சென்னை, கொளத்தூர், ரெட்டியப்பன் நகரில் வசித்து வரும் மாணிக்கம், என்பவர் கடந்த 6 வருடங்களாக கொளத்தூர், பாரத் ராஜீவ்காந்தி நகரில் உள்ள ஸ்ரீதேவி முத்துமாரியம்மன் கோவிலில் பூசாரியாக இருந்து வருகிறார். இவர் கடந்த 04.ந் தேதி அன்று இரவு, மேற்படி கோவிலை பூட்டிவிட்டு, மறுநாள் காலை பார்த்தபோது, கோவிலின் உண்டியலின் பூட்டு உடைக்கப்பட்டு, உண்டியலில் இருந்த பணம் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து மாணிக்கம், ராஜமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ராஜமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி உண்டியல் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி அசோக்குமார், என்பவரை கைது செய்தனர். மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 17 வயது மற்றும் 15 வயது கொண்ட இரண்டு இளஞ்சிறார்களிடம் விசாரணை செய்யப்பட்டது. அவர்களிடமிருந்து செலவு செய்தது போக பணம் ரூ.400/- மற்றும் குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் மேற்படி 3 பேரும் சேர்ந்து, கடந்த 6 ந் தேதி அன்று கொளத்தூர், எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் உண்டியலை திருடியதும், GKM காலனியில் உள்ள ஒரு வீட்டில் திருட முயற்சி செய்ததும் தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி அசோக்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். 2 இளஞ்சிறார்கள், சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

# கொடுங்கையூர் பகுதியில் செல்போன் பறித்த இருவர் கைது

**சென்னை ஆக 13-**
சென்னை, கொடுங்கையூர் பகுதியில் வசித்து வரும் திருதனுஞ்ஜெய், என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 05.ந் தேதி அன்று மாலை, தாமோதரன் நகர் வழியே நடந்து சென்று கொண்டிருந்த போது, அவருக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த அறிமுகமில்லாத 3 பேரில் ஒருவர், மேற்படி திருதனுஞ்ஜெய் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு, மூவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர்.

இது குறித்து திருதனுஞ்ஜெய், கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.மகேஷ், 2.சூர்யா, ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை மேற்கொண்டனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டு, குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 17 வயது இளஞ்சிறார், சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

